## இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனம் - 2016

-----------------------------------------------------------------------------------------------------------

இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 47 ஆம் இலக்க இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 31(1) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு ஒத்தாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 கூட்டுத்தாபனம் தொடர்ந்திருத்தல்

1999 ஆம் ஆண்டின் போது தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட திரைப்படங்களை பகிர்ந்தளிக்கும் தனியுரிமைத் தன்மை நீக்கப்பட்டதுடன் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமாகக் காணப்பட்ட பிரதான வருமான வழியாக இருந்த பகிர்ந்தளிக்கும் தரகுப் பணம் இழக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக கூட்டுத்தாபனத்தின் வருமானம் செலவினங்களை ஈடுசெய்து கொள்வதற்கு போதுமான அளவில் காணப்படாமையின் அடிப்படையில் பொதுத் திறைசேரியினால் 2011 ஆம் ஆண்டு முதல் ஊழியர் சம்பளத்திற்காக நிதிஏற்பாட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

மேலும், மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 ஆண்டு காலப்பகுதியிலும் கூட்டுத்தாபனம் திறைசேரி மானியங்களைப் பெற்றுக் கொள்வதற்கு முன்னர் தொடர்ச்சியாக நட்டத்தைப் பெற்ற நிலைமை அவதானிக்கப்பட்டதுடன் அதன் பிரகாரம் அரசாங்கத்தின் நிதி உதவியொன்று இன்றி கூட்டுத்தாபனத்தை நடாத்திச் செல்லல் நிச்சயமற்ற நிலையில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

### 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 7**

நியமத்தின் 7 ஆவது பிரிவின் பிரகாரம், திறைசேரி உண்டியல் மற்றும் மீள்விற்பனை உண்டியல்களை கணக்கீடு செய்யும் போது 03 மாதம் அல்லது அதற்குக் குறைந்த முதலீடுகள் காசுப்பாய்ச்சல் கூற்றில் காசு மற்றும் சமனான திரவச் சொத்தாக காண்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மூன்று மாத காலத்தில் காலாவதியாவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த திறைசேரி உண்டியல்களின்

பெறுமதியான ரூபா 9,612,350 மற்றும் உண்டியல்களின் மீள்விற்பனை ரூபா 103,361,405 என்பன காசு மற்றும் காசுக்குச் சமமானவற்றின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 16**

(i) நியமத்தின் 79(அ) பந்தியின் பிரகாரம் பிரகாரம் விளைவற்ற சொத்துக்கள் தொடர்பாக கணக்குக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தின் களனி திரைப்பட அரங்கத்திலுள்ள கறுப்பு, வெள்ளை மற்றும் நிற ஆய்வுகூடங்களிற்குச் சொந்தமான தொழில்நுட்ப ரீதியாக வழக்கற்றுப் போன பழைய சொத்துக்கள், கணக்கீடு செய்தல் மற்றும் அது தொடர்பான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) நியமத்தின் 79(ஆ) பந்தியின் பிரகாரம் நடைமுறையல்லாச் சொத்துக்களின் பயன்தரு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டிருக்காமையின் காரணமாக ரூபா 250,899,989 கிரயமான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்ட போதிலும் அவை மேலும் பயன்படுத்தப்பட்டுக்கொண்டிருந்தன. அதற்கிணங்க, இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட தவறை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 19**

நியமத்தின் 57 ஆம் பந்தியின் பிரகாரம் ஆயுட்கால எண்ணிக்கை மதிப்பீடொன்று மேற்கொண்டு ஊழியர் சேவைக்குப் பின்னரான நலன் ஒதுக்கீடுகள் கணிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு முரணாக நிறுவனத்தால் சேவையின் பின்னரான நலன்களின் ஏற்பாடுகளுக்காக கணக்கீட்டுக் கொள்கையொன்று அறிமுகப்படுத்தப்படாமல் ஒவ்வொரு ஊழியருக்கும் சேவையாற்றிய ஒரு வருடத்திற்கு அரை மாதத்திற்குச் சமமான பணிக்கொடைப் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது.

**(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் 37**

ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக 2006 சனவரி முதல் 2015 திசெம்பர் வரை வாழ்க்கைச் செலவுப்படி கவனத்தில் கொள்ளப்படாமல் பங்களிப்புப் பணம் கணிப்பீடு செய்யப்பட்டமையால் ரூபா 2,763,753 நிலுவைத் தொகையும், ரூபா 1,381,876 தொகையான மிகைக் கட்டணமும் செலுத்தவேண்டியேற்பட்டிருந்ததுடன் அதற்காக பணிப்பாளர் நபையின் அங்கீகாரம் 2017 ஏப்ரல் 27 ஆந் திகதி கிடைத்திருந்த போதிலும் நியமத்தின் பிரகாரம் கணக்குகளில் நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை.

**(உ) இலங்கைக் கணக்கீட்டு நியமம் 38**

நியமத்தின் 119 ஆம் பந்தியின் பிரகாரம் களணி பல்கலைக்கழக திரைப்பட அரங்கத்தில் உற்பத்திக்குப் பின்னரான நடவடிக்கைகளிற்காக பயன்படுத்தப்பட்ட மென்பொருள் நிதிக்கூற்றுக்களில் அருவச் சொத்துக்களின் கீழ் காட்டப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் 40**

நியமத்தின் 75(இ) ஆம் பந்தியின் பிரகாரம் முதலீட்டுச் சொத்துக்கள் இனங்காணப்பட்டு அது தொடர்பாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட வேண்டியிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தால் 15 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் மூன்று நிறுவனங்களுக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த கட்டிடம் தொடர்பாக பொருத்தமான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் கொள்கை**

ஆதனங்கள் கிரயத்தில் அல்லது மதிப்பீட்டுப் பெறுமதியில் கணக்கீடு செய்தல் கொள்கையாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்திற்குரிய பௌத்தலோக்க மாவத்தையில் அமைந்துள்ள 224 ஆம் ஆதன வரி இலக்க காணி மற்றும் களணி திரைப்பட அரங்கத்தின் காணி என்பன 2007 ஆம் ஆண்டின் போது இறுதியாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், மீளாய்வாண்டின் இறுதியில் 10 வருடங்கள் கடந்திருந்த போதிலும், இந்தக் காணியை மீள மதிப்பீடு செய்து நியாயமான பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

நீண்டகால வைப்பான தேசிய சேமிப்பு வங்கியில் உள்ள நிலையான வைப்புப் பெறுமதி ரூபா 17,891,742 தொகை குறுங்கால முதலீடாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

**2.2.4 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி நிலைமைக் கூற்றில் உள்ளடக்கப்பட்ட 02 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகளுக்காக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பட்டோலை / பேரேட்டு மீதிகளை ஒப்பீடு செய்த போது ரூபா 13,495,075 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) கூட்டுத்தாபனத்தின் புத்தகங்களினதும் றித்மா சபையின் புத்தகங்களினதும் பிரகாரம் உள்ளக திணைக்களத்தின் நடைமுறைக் கணக்கில் ரூபா 4,696,302 தொகையான விளக்கமளிக்கப்படாத வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் வங்கி நடைமுறைக் கணக்கின் வங்கி மீதி ரூபா 10,607,968 ஆக இருந்த போதிலும், வங்கி இணக்கக் கூற்றின் பிரகாரம் அந்த மீதி ரூபா 6,607,968 ஆனமையால் ரூபா 4,000,000 இணக்கஞ் செய்யப்படாத வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

**2.2.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடன்பட்டோர்களிடமிருந்து மேலதிகமாக அறவிடப்பட்ட பணத்தை உரிய நபர்களுக்கு மீளச் செலுத்துவதற்கோ அல்லது வருமானத்திற்கு எடுப்பதற்கோ அல்லது வேறு பொருத்தமான செயற்பாடுகளோ எடுக்கப்படாமையின் காரணமாக

ரூபா 1,110,955 தொகையான உடன்பட்டோர் செலவு மீதி 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கணக்குகளில் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) மருதானை, சினேசிட்டி திரைப்பட மண்டபத்திலிருந்து 2003 ஆம் ஆண்டு முதல் 2016 மே 31 ஆந் திகதி வரை அறவிடப்பட வேண்டியிருந்த திரைப்பட வாடகையான ரூபா 12,343,433 தொகையை இந்த அறிக்கைத் திகதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2016 மே 31 ஆந் திகதிக்குப் பின்னர் நாளாந்த அறிக்கை அனுப்பப்படாமையினால் அறவிட வேண்டிய திரைப்பட வாடகை வருமானத்தைக் கணிப்பீடு செய்வதற்கும் கணக்குகளில் வெளிப்படுத்துவதற்கும் முடியாதிருந்தது.

(இ) சுயமாக சேவையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொள்தற்காக திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெற்ற இழப்பீட்டுத் தொகையிலிருந்து மீதியாகக் காணப்பட்ட ரூபா 5,000,000 தொகை மீண்டும் திறைசேரிக்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2001 ஆம் ஆண்டில் சினிமா திரையரங்களிற்கு திரைப்படங்களை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கைகளை தனியார் சபைகளுக்கு கையளிப்பதற்கு முன்னர் 163 சினிமா திரையரங்குகளிலிருந்து ரூபா 7,604,528 தொகையும், கையளிக்கப்பட்டதன் பின்னர் காணப்பட்டதுடன் தற்போது மூடப்பட்டுள்ள 186 சினிமா திரையரங்குகளிலிருந்து மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 74,412,984 தொகையும் அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது. மேலும், தற்போது அமுலிலுள்ள சபைகளுக்குரிய சினிமா திரையரங்குகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைப் பணம் ரூபா 149,054,764 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் அப்பணத்தை அறவிடுவதற்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் சினிமாக்களின் தயாரிப்பு, ஏனைய கடன் மற்றும் ஊழியர் முற்பணம் என மொத்தக் கடன்கள் கூட்டுமொத்தமாக ரூபா 501,105,452 அறவிட வேண்டியிருந்தது. அந்தக் கடன்பட்டோர்களிடமிருந்து ரூபா 129,103,283 தொகையான இணங்கப்படாத மற்றும் அறவிடமுடியாத கடன் மீதிகளுக்காக 100 சதவீதம் அறவிடமுடியாக் கடன் நிதிஏற்பாடும் மிகுதிக் கடன்பட்டோருக்காக 5 சதவீத அறவிட முடியாக் கடன் நிதிஏற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும், மேற்கூறப்பட்ட கடன்பட்டோர்களிடமிருந்து ரூபா 146,733,583 தொகை அதாவது 29 சதவீதத்தை மீள அறவீடு செய்தல் நிச்சயமற்ற நிலையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 381(1) | அலுவலக வங்கிக் கணக்குகளை திறப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரூடாக பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் 2016 திசெம்பர் 31 வரையிலும் 08 வங்கி நடைறைக் கணக்குகள் திறைசேரியின் அங்கீகாரமின்றி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் அந்த வங்கிக் கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 36,705,863 இருந்தது. |

| | | |
|---|---|---|
| | (ii) நிதிப்பிரமாணம் 454(1) | பொருட் பதிவேட்டுப் பொருட்களின் பெறுவனவு, விநியோகித்தல் தொடர்பான பொது 44 படிவத்தின் பிரகாரம் பிரதான பொருள் இருப்புப் பதிவேடு ஒன்றைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அந்தந்த பிரிவிற்காக தனித்தனியான உரிய மாதிரிப் படிவத்தின் பிரகாரம் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) நிதிப்பிரமாணம் 754 | ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும், பொருள் இருப்புப் பதிடேு சமப்படுத்தப்பட்டு அடுத்த நிதியாண்டிற்கு முன்கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2015 யூலை 22 ஆம் திகதிய அமப/05/0741/041/012 ஆம் இலக்க அமைச்சரவையின் தீர்மானம் | அரசாங்க நிறுவனங்களால் கைவிடப்பட்ட செப்பு, பித்தளை அலுமினியம், ஈயம் போன்ற இரும்பற்ற உலோகங்கள் மற்றும் விசேட வகை இரும்பு, இரும்புத் தாது மற்றும் உருக்குத் துண்டுகள் என்பன கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு விற்பனை செய்யப்பட முடியுமாக இருந்தபோதிலும் பல்கலைக்கழக திரைப்படக்கூடத்தின் பழைய கட்டிடமொன்றில் குவித்து வைக்கப்பட்டிருந்த இரும்பு, உடைந்த துண்டுகள் மற்றும் படச் சுருள்கள் தொடர்பாக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | (i) 1971 இன் நிதி அதிகாரச்சட்டத்தின் 10(5) மற்றும் 11 ஆம் பிரிவுகள் மற்றும் 1971 இன் 47 ஆம் இலக்க திரைப்படக் கூட்டுத்தாபன அதிகாரச் சட்டத்தின் 27 ஆம் பிரிவு | 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை செலவினத்தை விஞ்சிய வருமானமான ரூபா 111,502,287 தொகை திறைசேரிக்கு அனுப்பப்படாதிருந்ததுடன் அப்பெறுமதியையும் உள்ளடக்கிய ரூபா 92,031,681 தொகை மற்றும் ரூபா 173,871,346 தொகைகள் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி உண்டியல்களின் மீள் விற்பனைப் பணம் என்பன நிதி அமைச்சரினதும் உரிய அமைச்சரினதும் அங்கீகாரமின்றி முதலீடு செய்யப்பட்டிருந்தது. |
| | (ii) நிதி அதிகாரச்சட்டத்தின் 7(2) ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் போது அரசாங்கத்திலிருந்து கிடைத்த மானியத் தொகையான ரூபா 74,250,000 கூட்டுத்தாபனத்தின் இலாபத்தைக் கணிப்பீடு செய்யும் போது கவனத்தில் கொள்ளப்படாதிருந்ததுடன் இலாப / நட்டக் கணிப்பீட்டின் பின்னர் விரிவான வருமானக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | 1999 யூன் 17 ஆந் திகதிய தேசிய திரைப்படக் கொள்கை மற்றும் வழிகாட்டல் | |
| | (i) 2.1 ஆம் பிரிவு | திரைப்படங்களை பதிவு செய்தல் மற்றும் விளம்பரப்படுத்தல் போன்ற உற்பத்திக்குப் பின்னரான செயற்பாடுகளுக்காக ஆகக்கூடியது ரூபா ஒரு மில்லியன் வரையான கடன், மக்கள் வங்கியின் மூலம் பெறப்பட வேண்டியிருந்த போதிலும், அதற்கு |

| | | |
|---|---|---|
| | | முரணாக திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் நிதியத்திலிருந்து ரூபா 20 மில்லியன் கூட்டுத்தொகை ''சரிகம'' திரைப்படத்திற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. |
| | (ii) 9 ஆம் பிரிவு | திரைப்பட காப்பகமொன்றைத் தாபித்து அது முகாமைத்துவ திரைப்பட கூட்டுத்தாபனத்தால் பேணிச் செல்லப்பட வேண்டியிருந்த போதிலும், திரைப்பட கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 273 பழைய திரைப்படங்கள் மாத்திரம் சுவடிக் கூடத் திணைக்களத்தின் பாதுகாப்பகத்தில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. எனினும், 1947 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை திரையிடப்பட்ட 962 திரைப்படங்கள் மற்றும் புதிய திரைப்படங்களின் பிரதிகள் என்பவற்றை பாதுகாப்பதற்காக வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | மதுவரிக் கட்டளை இலக்கம் 902 இன் 111 ஆம் பட்டோலையின் (ஏ) மற்றும் (சீ) பிரிவுகள் | வணக்க ஸ்தலங்கள் அல்லது பாடசாலைகளுக்கு 500 மீற்றருக்குள்ளும் மதுபானங்கள் விற்பனை செய்யும் இடத்திலிருந்து காணப்பட வேண்டிய தூரம் அடி 500 இற்குக் குறைவாயின் மதுபான விற்பனை அனுமதிப்பத்திரத்தில் விநியோகிக்க முடியாதிருந்த போதிலும், அது தொடர்பாக பரிசோதனையொன்று மேற்கொள்ளாமல் சினிமா திரையரங்குகளில் மதுபான விற்பனைக்கான சிபாரிசு வழங்கப்பட்டிருந்தது. |
| (ஊ) | 1971 இன் 47 ஆம் இலக்க திரைப்படக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 61(2)(உ) பிரிவு | முப்பரிமாண (3D) திரைப்படங்களுக்காக திரைப்பட கண்காட்சியகங்களில் கூட்டுத்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணத்தை விட ரூபா 100 மேலதிகமாக அறவிடப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டதுடன் கூட்டுத்தாபன புலனாய்வு உத்தியோகத்தர்களினால் அவ்வாறான சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டு சரிசெய்யப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் திறைசேரி மானியம் கிடைப்பதற்கு முன்னர் ரூபா 34,638,806 நட்டமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னயை ஆண்டின் நட்டம் ரூபா 59,186,725 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 24,547,919 தொகையான அதிகரிப்பைக் காண்பித்தது. ஏனைய வருமானம் ரூபா 13,380,566 இனால் அதிகரித்தமை மற்றும் அறவிடமுடியாக் கடனும் பணிக்கொடை ஒதுக்கீடுகளும் ரூபா 23,539,330 இனால் குறைவடைந்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது திறைசேரி மானியத்தைப் பெறுவதற்கு முன்னர் நிதி விளைவில் தொடர்ச்சியாக நட்டமடைந்திருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 50,487,786 தொகையான அது

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 34,638,806 ஆக இருந்தது. எனினும், நிதி விளைவில் ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றை மீளச் சீராக்கியதன் பின்னர் 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 31,192,547 தொகையான கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 67,483,892 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1971 இன் 47 ஆம் இலக்க தேசிய திரைப்படக் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் திரைப்படங்களைத் தயாரித்தல் மற்றும் திரைப்படங்களை காட்சிப்படுத்துவதற்குத் தேவையான படச் சுருள்கள், திரைப்படங்கள், புகைப்பட உபகரணங்களின் இறக்குமதி, திரைப்படங்களின் கொள்வனவு மற்றும் களஞ்சியப்படுத்தல் உள்ளடங்கலாக திரைப்படங்களை ஏற்றுமதி செய்தல், திரைப்படத் தயாரிப்பிற்கான படப்பிடிப்பு அரங்கத்தையும் திரைப்பட கண்காட்சி கூடங்களையும் தாபித்தல், திரையரங்கு வசதிகளை வழங்குதல் மற்றும் நிதி ரீதியாக உதவிசெய்தல், திரைப்படத் தயாரிப்பாளர்களிற்கான உபகாரம் செய்தல், பரிசுப்பொருட்கள் மற்றும் விருதுகளை வழங்குதல், கலந்துரையாடல்கள் மற்றும் செயலமர்வுகளை ஒழுங்குசெய்து நடாத்துதல், திரைப்பட விழாக்களை நடாத்துதல், திரைப்படங்கள் மீது பருவகால சஞ்சிகைகளை வெளியிடுதல் மற்றும் இலங்கைக்குள்ளேயும் இலங்கைக்கு வெளியேயும் திரைப்படங்கள் தொடர்பான சந்தை ஆய்வுகளை மேற்கொள்ளல் போன்ற நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக கூட்டுத்தாபனம் ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மேற்குறிப்பிட்ட நோக்கங்களை அடைதல் தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தொலைக்காட்சி அல்லது ஏனைய துறையொன்றில் திறமைகளைக் காண்பித்துள்ள இளம் சினிமா தாரர்களுக்கு தமது ஆரம்ப திரைப்பட தயாரிப்பிற்காக அரசாங்கத்தின் அனுசரனையைக் காண்பிப்பதற்காக வருடமொன்றிற்கு 04 திரைப்படங்களுக்கு படப்பிடிப்பு அரங்கு தயாரிப்பிற்காக ரூபா 12 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப்பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) திரைப்படக் கைத்தொழிலை மேம்படுத்துவதை அடிப்படை நோக்கமாகக்கொண்டு தயாரிப்பாளர்களிற்கு திரைப்படத் தயாரிப்பிற்கான நிதி உதவிகளை வழங்குவது நோக்கமாக இருந்தபோதிலும் அவ்வாறான தயாரிப்புக் கடன்கள் எதுவும் 2012 இலிருந்து வழங்கப்பட்டிருக்கவில்லை. இலங்கைக்குள்ளேயும் அதே போல் வெளியேயும் திரைப்படங்கள் தொடர்பில் சந்தை ஆய்வுகளை நடாத்துவதால் அத்தகைய நோக்கங்களை அடைவதற்கு அவ்வாறான நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சகல சினிமாத் திரையரங்கும் ஆகக் குறைந்தது மாதத்திற்கு ஒரு தடவை பரிசோதனைக்கு உட்படும் வகையில் அதாவது ஒட்டுமொத்தமாக 2000 கண்காட்சி தடவைகளை பரீட்சிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் 850 கண்காட்சித் தடவைகள் மாத்திரம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தது.

(ஈ) சர்வதேச நியமத்தின் பிரகாரம் திரைப்படத்தின் சுற்றி வரவுள்ள ஒலியை ஒன்றுசேர்ப்பதற்காக (Surround Sound) விஜய குமாரதுங்க மேடையில் ஒலித்தெறிப்பு கட்டுப்படுத்தும் (Acoustic treatment) உபகரணங்களைக் கொள்வனவு செய்து பொருத்துதல் மற்றும் படத்திற்கான பாட்டுக்கள் மற்றும் சங்கீதங்களை ஒழுங்கமைப்பதற்கான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 30 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்தப் பணி நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(உ) திரைப்படக் கைத்தொழில் தொடர்பாக முறைப்பாடுகளை சமர்ப்பிப்பதற்கு விசேட பிரிவொன்று கூட்டுத்தாபனத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் பார்வையாளர்களிடமிருந்தும் திரைப்படத் தயாரிப்பாளர்களிடமிருந்தும் திரைப்படக் கைத்தொழில் தொடர்பாக கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகளை ஆவணப்படுத்தல் மற்றும் முறைப்பாடுகளை உரிய பிரிவுகளிற்கு தெரியப்படுத்தி கால ரீதியாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், திரைப்படக் கைத்தொழிலின் முன்னேற்றத்திற்காக தேசிய கொள்கைகளை உருவாக்குவதற்காகவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கையரை சினிமாவின் அடையாளமாக பாதுகாப்பதன் மூலம் சர்வதேச தரத்தை அடையக்கூடிய வகையில் தயாரிப்புக்களை கையளித்தல் கூட்டுத்தாபனத்தின் தூரநோக்காக உள்ள போதிலும் வேண்டப்பட்ட நிதி உதவி புதிய தயாரிப்பாளர்களிற்கு வழங்கப்பட்டிருக்காமையால் புதிய தயாரிப்பாளர்களுக்கு முன்னோக்கி வருவதற்கு இடையூறுகள் ஏற்பட்டிருந்ததுடன் சரியான படைப்புக்களை தயாரிப்பதற்குப் பதிலாக வணிக ரீதியான திரைப்படங்களை முன்வைப்பதன் மூலம் பணமீட்டுவதே அவர்களின் பிரதான நோக்கமாக இருந்தது.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தில் 10 தொழிலாளர்களின் மிகையொன்று காணப்படும் போது மாதாந்தம் ரூபா 293,490 தொகை செலுத்தும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்பு நடவடிக்கைகள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் நிராகரிக்கப்பட்டிருந்த தனியார் சேவை வழங்குனருக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் தேவையான ஊழியர் எண்ணிக்கையை ஈடுபடுத்துவதற்கு இந்த நிறுவனம் தவறியிருந்தமையின் காரணமாக திருப்திகரமற்ற சேவை வழங்கலொன்று தொடர்ச்சியாக இடம்பெற்றிருந்தது.

(ஆ) கூட்டுத்தாபனத்திற்கு சினிமா திரையரங்குகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவைப் பணம் மற்றும் திரைப்பட தயாரிப்பிற்காக வழங்கப்பட்டுள்ள கடன் பணம் ரூபா 192 மில்லியன் தொகையை பதிவழிப்பதற்காக அங்கீகாரம் கோரப்பட்ட கோரிக்கைக் கடிதத்தின் பதிலாக 2015 ஆகஸ்ட் மாதத்தின் PE/ME/NFC/GEN/2015 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் பின்வரும் குறைபாடுகள் ஏற்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) பொது முயற்சிகள் தொடர்பான பாராளுமன்றக் குழுவினாலும் (COPE) சிபாரிசு செய்யப்பட்டதன் பிரகாரம், அமைச்சு மட்டத்தில் குழுவொன்று நியமித்து நிலுவைப் பணத்தை சேகரிப்பதற்காக முறையான திட்டமொன்று தயாரிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், நியமிக்கப்பட்டுள்ள குழுவிற்காக அமைச்சின் பிரதிநித்துவம் இடம்பெற்றிருக்காமை.

(ii) உரிய கடன் பணத்தை அறவிடுவதற்காகவுள்ள சட்ட ரீதியான இயலுமை தொடர்பாக புலனாய்வு செய்யாமை மற்றும் அவ்வாறு புலனாய்வு செய்வதன் மூலம் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுகின்ற கடன்பட்டோரின் சட்டத்தின் பிரகாரம், உரிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை.

(iii) ஆகக் குறைந்தது தற்போது செயற்படுகின்ற சினிமா திரையரங்குகளிலிருந்து தவணைப் பணமாக, நீண்ட கால அல்லது பெறப்பட்ட கடன் பணத்தை தீர்த்து கொள்வதற்கு முறையான செயல்நடைமுறையொன்று மேற்கூறப்பட்ட கடன் குழுவினால் சமர்ப்பிக்கப்படாமை.

(iv) மேற்கூறப்பட்ட (ii) மற்றும் (iii) இல் அறவிடக்கூடிய கடன் தொகை தவிர மிகுதித் தொகையை பதிவழிப்பதற்காக அமைச்சரவைக்கு அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பித்து அங்கீகாரம் பெறவேண்டியமை அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளப்படாமை.

(இ) கூட்டுத்தாபனத்தின் கட்டிடம் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பௌத்தலோக மாவத்தையில் ஆதன வரி இலக்கம் 303 இலுள்ள காணியின் சட்டரீதியான உரித்தைப் பெற்றுக்கொள்வதற்கும் காணியின் பெறுமதியை கணக்கீடு செய்வதற்கும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி உண்டியல் மீள்விற்பனையின் போது ஒரு வங்கியிலேயே தொடர்ச்சியாக முதலீடு செய்யப்பட்டிருந்ததுடன் முதன்மைச் சந்தையில் அரசாங்க வங்கிகளிலிருந்து கூறுவிலை கோரி மிகவும் சிறந்த நலன் பங்களிப்பு வட்டி வீதத்தின் அடிப்படையில் முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மத்திய வங்கியின் மூலம் விநியோகிக்கப்படுகின்ற திறைசேரி உண்டியல் ஏலவிற்பனையின் போது செலவு வைக்கப்பட்ட சராசரி வட்டி சிகிதத்தை விட 0.2 சதவீத அளவில் குறைந்த சதவீதத்தில் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 264,903,027 தொகை முதலீடு செய்யப்பட்டிருந்தது.

### 4.4 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டுத்தாபனத்தின் நோக்கத்திற்கு எவ்வித தொடர்பும் இன்றியும், அடிப்படையாகக் கொள்ளப்பட்ட சட்ட ஏற்பாடுகள் இன்றியும் கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் றித்மா சபையின் 39 சினிமா திரையரங்குகளில் சில வருடங்களுக்கு முன்பிருந்தும், ஏனை சபைகளின் 16 சினிமா திரையரங்குகளில் மீளாய்வாண்டின் போது மதுபான அனுமதிப்பத்திரம் சிபாரிசு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்க அனுசரணையின் கீழ் மதுபான அனுமதிப்பத்திரம் விநியோகப்படுத்தல் இலங்கை அரசாங்கத்தின் ''மத்தட தித்த'' கொள்கைக்கு முரணான செயற்பாடாக இருந்ததுடன் குடும்ப திரைப்படங்கள் மற்றும் சிறுவர் திரைப்பட கண்ணகாட்சிகள் போன்ற சந்தர்ப்பத்தின் போதும் மதுபானங்களுக்காக சந்தர்ப்பத்தை வழங்கும் வகையில் திரையரங்குகளுக்காக மதுபான அனுமதிப்பத்திரம் சிபாரிசு செய்யப்பட்டிருந்தமை சர்ச்சைக்குரிய விடயமாக அவதானிக்கப்பட்டது.

(இ) விநியோகிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரத்தின் பிரகாரம் மதுபானம் விற்பனை செய்பவர்களுக்காக மாத்திரம் செய்யப்பட வேண்டிய போதிலும், நடாத்துபவர்கள் அல்லாத ஒரு தரப்பினருக்கு மதுபான விற்பனை செய்வதற்கும் மதுபான விற்பனை உரித்தை தனியாருக்கும் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.5 நிதியத்தின் குறைவான பயன்பாடு

கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான 08 வங்கிக் கணக்குகளில் மாதாந்த சராசரி மீதி ரூபா 55,560,598 ஆக இருந்ததுடன், அந்தத் தொகையில் ஒரு பகுதியை குறுங்கால முதலீடுகளில் ஈடுபடுத்தி மேலதிக வருமானமொன்றைப் பெறக்கூடியதாக இருந்த போதிலும், அது தொடர்பாக கவனஞ் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.6 விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 870,659 கூட்டுத்தொகையான யானைத் தந்தம் மற்றும் இரசாயனப் பொருட்களின் இருப்பு 2014 ஆம் ஆண்டிலிருந்து விநியோகிக்கப்படாமல் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 156,800 பெறுமதியான முச்சக்கர வண்டியைப் பழுதுபார்ப்பதற்கு ரூபா 200,000 செலவாகின்றமையால் பழுதுபார்த்தல் வினைத்திறனற்றதாக 2017 செப்தெம்பர் 22 ஆந் திகதி வாகன இயந்திர ஆலோசகர் சிபாரிசு செய்திருந்த போதிலும் அதனை விற்றுத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தலைமை அலுவலகத்தின் நலன்புரிச் சங்கத்தால் வழங்கப்பட்ட 500 இற்கு மேற்பட்ட நூலகப் புத்தகங்களின் அளவொன்று களணி பல்கலைக்கழக திரைப்படக் கூடத்தில் பாதுகாப்பற்ற வகையில் குவித்து வைக்கப்பட்டிமையின் காரணமாக அழிவடைந்து செல்லும் நிலையில் காணப்பட்டது.

## 4.7 தாமதமான செயற்திட்டங்கள்

பல்கலைக்கழக திரைப்பட கூடத்தில் திரைப்பட தயாரிப்பதற்குப் பின்னரான வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 30 மில்லியன் திறைசேரி நிதிஏற்பாடு கிடைத்திருந்ததுடன் அதற்காக கேள்வி கோரப்பட்டிருந்த போதிலும், அவை கூட்டுத்தாபனத்தின் மாதிரிகளுக்கு இணங்காமையினால் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. தேவையான மாதிரிகளைத் தயாரித்தல் மற்றும் நிர்மாண நடவடிக்கைகளுக்காக இந்திய மதியுரையாளருக்கு அமெரிக்க டொலர் 8,000 செலுத்தியிருந்த போதிலும், 2017 மே வரையிலும் இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2017 இன் செயற்திட்டத்தை 03 கட்டங்களின் கீழ் நிறைவேற்றுவதற்குத் தேவையான மதியுரைச் சேவைகள் மாத்திரம் பெறப்பட்டிருந்தன.

## 4.8 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 71 ஆக இருந்ததுடன் தற்போதைய தேவையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியினர் எண்ணிக்கை மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம், அத்தியவசியமான 02 பதவிநிலைப் பதவிகள், சிறிது காலமாக வெற்றடமாகக் காணப்பட்டமையின் காரணமாக உயர் முகாமைத்துவத்தின் வழிகாட்டல்கள் மற்றும் மேற்பார்வையின் கீழ் திட்டம் தயாரிக்கும் போதும், இலக்கினைக் கட்டியெழுப்பும் போதும், அந்த இலக்கினை அடைந்து கொள்வதற்காக செயற்படும் போதும் பிரச்சினைகள் தோன்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) கூட்டுத்தாபனத்தில் வெற்றிடமாகவுள்ள பதவிகளை நிரப்புவதற்காக வெளி விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரி அந்த வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு 2016 ஆம் ஆண்டின் போது திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2017 யூலை 12 ஆந் திகதி வரை எந்த ஆட்சேர்ப்புக்களும் இடம்பெற்றிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

---

### 5.1 கூட்டிணைந்த திட்டம்

---

கூட்டுத்தாபனத்தில் கூட்டிணைந்த திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் போது அதன் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

---

கூட்டிணைந்த திட்டத்தின் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. செயல்நடவடிக்கைத் திட்டத்தில் காலாண்டு ரீதியாக இலக்கிடப்பட்ட செயற்பாடுகள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அதன் செயலாற்றலை மதிப்பீடு செய்யக்கூடிய வகையில் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.3 உள்ளகக் கணக்காய்வு

---

அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் 03 நிரந்தர கணக்காய்வு உதவியாளர் பதவிகள் காணப்பட வேண்டிய போதிலும், 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் எந்தவொரு உதவியாளரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் தொடர்பாக கூட்டுத்தாபனம் போதயிளவில் கவனம் செலுத்தாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.4 கணக்காய்வு குழு

---

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஆகக்குறைந்தது மூன்று மாதங்களிற்கு ஒரு தடவை கணக்காய்வுக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது 02 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தன.

### 5.5 பெறுகைகள் திட்டம்

---

பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(ஆ) பிரிவின் பிரகாரம் ஆகக்குறைந்தது மூன்று வருட காலத்தில் எதிர்பார்க்கப்பட்ட பெறுகை நடவடிக்கைகளுக்கான பிரதான பெறுகைகள் திட்டமொன்றும், 4.2.2 இன் பிரகாரம் பெறுகைகள் கால அட்டவணையும் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக மாத்திரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. மேலும், மிகவும் அவசர தேவையான காபன் கொள்வனவு செய்தல், கணனி இணையத்தளப்படுத்தல் இலக்க தொழில்நுட்ப திரைப்பட பேகேஜ் தரப் பரிசோதனை இலக்க ரீதியிலான தொழில்நுட்பத்திற்கு உட்படுத்துவதற்கு ரூபா 16 மில்லியனும், பொதுவான தேவையாக கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மின்பிறப்பாக்கி

இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு ரூபா 15 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**5.6 ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆந் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளின் ஆண்டறிக்கை 2017 மே 23 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்குக் காலம் கூட்டுத்தாபனத்தின் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | சொத்துக் கட்டுப்பாடு | (i) | திரைப்படக்கூடத்தில் காணப்படுகின்ற விளைவற்ற சொத்துக்களை இனங்கண்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை. |
| | | (ii) | நூலகப் புத்தகங்கள் பாதுகாப்பின்றிக் வைக்கப்பட்டிருந்தமை. |
| | | (iii) | இருப்புப் புத்தகம் பெறுவனவு, விநியோகித்தல்களை இனங்காண்பதற்கு இலகுவான வகையில் சரியான பிரகாரம் பராமரிக்கப்படாமை. |
| (ஆ) | கடன்பட்டோர் கட்டுப்பாடு | (i) | 10 வருடங்களிற்கு மேற்பட்ட காலமாக அறவிடப்படாது காணப்படுகின்ற கடன் மீதி தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்காமை. |
| | | (ii) | கடன் உடன்படிக்கைகள் தொடர்பாக சரியான மேற்பார்வையொன்று காணப்படாமை |
| | | (iii) | கடனை அறவிடும் வேலைத்திட்டமொன்றோ அல்லது பிரிவொன்றோ தாபிக்கப்படவில்லை. |
| (இ) | வருமானக் கட்டுப்பாடு | (i) | திரைப்பட வாடகை வருமானம் மற்றும் வருடாந்தம் அறவிட வேண்டிய வாடகைப் பணம் என்பவற்றை அறவிடுதல் தொடர்பாக மேற்பார்வையொன்று காணப்படாமை |
| | | (ii) | சினிமா திரையரங்குகளிலிருந்து கிடைத்த வருமானம் உறுதிப்படுத்தப்படாமல் தயாரிப்பாளரின் வாடகை வருமானத்தை பகுதியாகச் செலுத்தியமை |

| | | |
|---|---|---|
| (ஈ) | கடன் கட்டுப்பாடு | திரைப்பட விளம்பர கடன் பணத்தை அறவீடு செய்யும் போது உடன்படிக்கையின் பிரகாரம் முதலாவது வருமானத்தில் அறவிடப்படாமை |
| (உ) | கணனி மென்பொருள் முறைமைக் கட்டுப்பாடு | (i) ஒவ்வொரு உத்தியோகத்தரின் மட்டத்திற்காகவும் தனிப்பட்ட கோவை வழங்கப்படாமை.<br><br>(ii) பிரதான கோவையில் தரவுகளை மாற்றுதல் பதவிநிலை உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்படாமை மற்றும் மேற்பார்வை செய்யப்படாமை<br><br>(iii) பெறப்பட்ட முற்பதிவுகளை (backup) அந்த இடத்திலேயே வைத்தல்<br><br>(iv) Teamviewer மென்பொருள் மற்றும் இணையத்தள வசதிகள் மூலம் வெளிநபர்களுக்கு சம்பளம் தயாரிக்கும் முறைமையில் உட்செல்லும் அபாயம் காணப்பட்டமை |